CHUNDIKULI BRANCH LIBRARY
MUNICIPAL COUNCIL
JAFFNA

Y.M.C.A.

Riegstered as a Newspaper | பக்கங்கள் 04 | விலை: ரூபா 5.00

# ஈழநாதம்

THE EELANAATHAM | மக்கள் தினசரி | Peoples Daily

நாதம் 04 | திருவள்ளுவர் ஆண்டு 2024 ஆவணி 26 | 11-09-1993 | சனிக்கிழமை | ஓசை 205

## தபால் திணைக்களத்தினை கூட்டுத்தாபனமாக்க சிபார்சு

(கொழும்பு)

தபால்திணைக்களம் வர்த்தக அடிப்படையில் இலாப நோக்குடன் ஒரு கூட்டுத்தாபனமாக நடத்தப்படவுள்ளது. தபால் திணைக்களத்தின் நடவடிக்கைகள் குறித்தும் அதை ஒரு கூட்டுத்தாபனமாக மாற்றுவது பற்றிய சாத்தியங்களையும் ஆராய நியமிக்கப்பட்ட ஆணைக்குழு இவ்வாறு பரிந்துரைத்துள்ளது. முன்னாள் தபால்மா அதிபரும், தற்போது துறைமுக அதிகார சபையின் தலைவராகக் கடமையாற்றும் டி. எவ் பாலசந்திரா இந்த ஆணைக்குழுவின் தலைவராவர். தபால் திணைக்களம் அத்தியாவசிய சேவைகளில் ஒன்று எனவும் இக் கமிட்டி தெரிவித்தது. இது குறித்து தன்னால் எதையும் கூறமுடியவில்லை என குறிப்பிட்ட தபால்மா அதிபர் இச் சிபார்சு சரியான தென நம்புவதாகவும் அவர் தெரிவித்தார்.

# பிரான்சிடம் போர் தளபாடங்கள் அரசு கொள்வனவு செய்ய முயற்சி

## புலிகளின் வெளிநாட்டு தூதரகங்களை மூடுமாறு அரசு கோர வேண்டுமாம்

[கொழும்பு]

மேற்கு நாடுகளில் உள்ள விடுதலைப் புலிகளின் அலுவலகங்களை மூடுமாறு அவற்றின் அரசாங்கங்களை வெளியுறவு அமைச்சர் கேட்க வேண்டும். அவ்வாறு கேட்க முடியாது போனால் ஐரிஸ் குடியரசு இராணுவ கெரில்லாக்களின் அலுவலகம் ஒன்றை கொழும்பில் திறக்குமாறு அவ்வியக்கத்திற்கு அழைப்பு விடுக்க வேண்டும் என நான் கோருவேன்.

இவ்வாறு சிறிலங்கா சுதந்திரக்கட்சி பாராளுமன்ற உறுப்பினர் திலக் கருணாரட்ன புதன்கிழமை பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் மேற்கு நாடுகளில் விடுதலைப் புலிகள் இயக்கத்தின் அலுவலகங்களும் செயற்பாடுகளும் அனுமதிக்கப்படுவதனால் இலங்கைக்கு ஏற்...

(4ஆம் பக்கம் பார்க்க)

## கிளாலியில் ஹெலி தாக்கு

கிளாலி கடலிலும் கரையிலும் நேற்றுக்காலை 9 மணி முதல் 10 மணிவரை உலங்கு வானூர்தி 50 கலிபர் தாக்குதலை மேற்கொண்டது.

## மீனவர் மீது துப்பாக்கிசூடு

நேற்று முன்தினம் காலை 11 00 மணியளவில் வெல்லாவெளி- நாதனவெளி ஆற்றில் மீன்பிடிக்கச்சென்ற மீனவர் மீது இராணுவத்தினரும் தேச விரோத குழு ஒன்றும் இணைந்து துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர். சேத விபரம் தெரியவரவில்லை.


## கொழும்புத் துறைமுகத்தில் பிரான்ஸ் யுத்தக் கப்பல்

(கொழும்பு)

பிரான்சிடம் இருந்து சிறிலங்கா கடற்படை, விமானப்படை ஆகியவற்றிற்குத் தேவையான நவீன போர்த்தளபாடங்களைக் கொள்வனவு செய்வதில் சிறிலங்கா அரசாங்கம் தீவிர முயற்சிகளை மேற்கொண்டு வருவதாக சிறிலங்கா பாதுகாப்பு வட்டாரங்களில் இருந்து தெரியவருகின்றது. இதேவேளை, இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் பிரான்ஸ் அரசின் நலன்களைக் கவனிக்கும் போர்க் கப்பல் ஒன்றும் கொழும்பு துறைமுகத்தை வந்தடைந்துள்ளது.

சிறிலங்கா அரசாங்கம் பிரான்ஸ் அரசிடம் இருந்து போர்த்தளபாடங்களையும், கடற்படைக்குத் தேவையான அதிவேகத் தாக்குதல் படகுகளையும் கொள்வனவு செய்வதில் நீண்ட காலமாக அக்கறை காட்டி வருகின்றது. இதன் ஆரம்ப கட்டமாக பிரான்ஸ் நிறுவனம் ஒன்றுடன் கூட்டாக கொழும்பு டொக்யாட் நிறுவனம் கடற்படைக்கு தேவையான படகுகள் தயாரிப்பதற்கான ஒப்பந்தம் ஒன்றில் கைச்சாத்தும் இட்டுள்ளது. இதே

[4ஆம் பக்கம் பார்க்க]



பருத்தித்துறையில் நேற்றுமுன்தினம் திறந்து வைக்கப்பட்ட தமிழீழத்தின் மூன்றாவது நீதி மன்றத்தில் வழக்கு விசாரணை நடைபெறும்போது எடுக்கப்பட்ட படம்.

## கப்டன் மலரவனின் 'போர் உலா' வெளியீடு

மாவீரர் கப்டன் மலரவன் (லியோ) எழுதிய "போர் உலா" எனும் நூலின் வெளியீட்டு விழா இன்று மாலை 4.00 மணிக்கு பரியோவான் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இவ் வெளியீட்டு விழா விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்புப் பொறுப்பாளர் திரு. இன்பன் தலைமையில் இடம்பெறும்.

இந் நிகழ்வில் வெளியீட்டு உரையை விடுதலைப் புலிகள் கலை பண்பாட்டுக் கழகப் பொறுப்பாளர் புதுவை இரத்தினதுரை அவர்கள் நிகழ்த்துவார்கள்.

அரசியல் துறைப் பொறுப்பாளர் திரு தமிழ்ச்செல்வன் நூலை வெளியிட்டு வைக்க, முதல் பிரதியை துணை இரா

(04ஆம் பக்கம் பார்க்க)

## மட்டு. கிராமங்களில் சுற்றிவளைப்பு, கைது

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பில் இரு கிராமங்களை சுற்றிவளைத்த படையினர் அங்கு பொதுமக்கள் மீது தாக்குதலை நடத்தி பின்னர் அவர்களில் சிலரை கைது செய்து கொண்டு சென்றனர்.

கடந்த வியாழனன்று பிற்பகல் 1 30 மணியளவில் பாலையடிவெட்டை இராணுவத்தினர் காக்காச்சிவெட்டை, பலாச்சோலை ஆகிய பகுதிகளை சுற்றிவளைத்தனர். இப்

## புலிகளின் தாக்குதல் யுத்திகள் உலகில் வேறு எங்கும் இல்லை

### சவூதி பத்திரிகை தெரிவிப்பு

(ரியாட்)

இலங்கையில் தற்போது

பீது இராணுவத்தினரும் தேச விரோத குழு ஒன்றும் இணைந்து துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர். சேத விபரம் தெரியவரவில்லை.

பிரான்ஸ் அரசின நலன்களைக் கவனிக்கும் கொழும்பு துறைமுகத்தை வந்தடைந்துள்ளது

இறிலங்கா அரசாங்கம் பிரான்ஸ் அரசிடம் இருந்து போர்த்தளபாடங்களையும், கடற்படைக்குத் தேவையான அதிவேகத் தாக்குதல் படகுகளையும் கொள்வனவு செய்வதில் நீண்ட காலமாக அக்கறை காட்டி வருகின்றது. இதன் ஆரம்ப கட்டமாக பிரான்ஸ்

போர்க் கப்பல் ஒன்றும்

நிறுவனம் ஒன்றுடன் கூட்டாக கொழும்பு டொக்கியாட் நிறுவனம் கடற்படைக்கு தேவையான படகுகள் தயாரிப்பதற்கான ஒப்பந்தம் ஒன்றில் கைச்சாத்தும் இட்டுள்ளது. இதே

[4ஆம் பக்கம் பார்க்க]

## கப்டன் மலரவனின் 'போர் உலா' வெளியீடு

மாவீரர் கப்டன் மலரவன் (லியோ) எழுதிய "போர் உலா" எனும் நூலின் வெளியீட்டு விழா இன்று மாலை 4.00 மணிக்கு பரியோவான் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இவ் வெளியீட்டு விழா விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்புப் பொறுப்பாளர் திரு. இன்பன் தலைமையில் இடம்பெறும்.

இந் நிகழ்வில் வெளியீட்டு உரையை விடுதலைப் புலிகள் கலை பண்பாட்டுக் கழகப் பொறுப்பாளர் புதுவை இரத்தினதுரை அவர்கள் நிகழ்த்துவார்கள்.

அரசியல் துறைப் பொறுப்பாளர் திரு தமிழ்ச்செல்வன் நூலை வெளியிட்டு வைக்க, முதல் பிரதியை அணை இரா

(04ஆம் பக்கம் பார்க்க)

## மட்டு. கிராமங்களில் சுற்றிவளைப்பு, கைது

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பில் இரு கிராமங்களை சுற்றிவளைத்த படையினர் அங்கு பொதுமக்கள் மீது தாக்குதலை நடத்தி பின்னர் அவர்களில் சிலரை கைது செய்து கொண்டு சென்றனர்.

கடந்த வியாழனன்று பிற்பகல் 1 30 மணியளவில் பாலையடிவெட்டை இராணுவத்தினர் காக்காச்சிவெட்டை, பனைச்சோலை ஆகிய பகுதிகளை சுற்றிவளைத்தனர். இப் பகுதிகளில் துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்ட பின் அங்குள்ள மக்களை ஒன்று சேர்த்து காக்காச்சி வெட்டை பாடசாலையில் வைத்து அவர்களை தாக்கினர்

(4ஆம் பக்கம் பார்க்க)

## எறிகணைத் தாக்குதலில் மூன்று போராளிகள் வீரச்சாவு

நேற்று முன்தினம் காலை 10. 55 மணியளவில் பூநகரி வாடியடிச்சந்திப்பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட எறிகணை தாக்குதலில் விடுதலைப்புலிப் போராளிகள் மூவர் வீரச்சாவடைந்தனர். வீரச்சாவடைந்த லெப்டினன்ட் செல்வன் / அனந்தன் (முருகேசபிள்ளை சரவணபவன் கலைநகர், தற்போதைய முகவரி சீனியர்லேன் கலட்டி யாழ்ப்பாணம்) லெப்டினன்ட் சிவம் (சின்னையா கமலேஸ்வரன் வலவாய், தற்போதைய முகவரி கோப்பாய் வடக்கு), 2ஆம் லெப்டினன்ட் பணம்பாரன் (தங்கராசா சதீஸ்வரன் இல. 9/7 அன்னசததரலேன் கந்தர்மடம் யாழ்ப்பாணம்) ஆகிய மூன்று போராளிகளுக்கும் விடுதலைப்புலிகள் தமது வீரவணக்கத்தை தெரிவித்துக் கொள்கின்றனர்.



லெப். செல்வன்/அனந்தன்



லெப். சிவம்



2ஆம் லெப். பணம்பாரன்

## மக்கள் அஞ்சலிக்காக மாவீரர் வித்துடல்கள்

பூநகரி வாடியடிச் சந்தியில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஸ்ரீலங்கா இராணுவத்தின் எறிகணைத் தாக்குதலின் போது வீரச்சாவைத் தழுவிக் கொண்ட லெப். அனந்தன், லெப். சிவம் ஆகியோரின் வித்துடல்கள் மக்கள் அஞ்சலிக்காக இன்று காலை 10-00 மணிக்கு மூளாய் சித்தூர் செயலகத்தில் வைக்கப்பட்டு அஞ்சலிக் கூட்டம் நடைபெறும். அதனைத் தொடர்ந்து மூளாய், சங்கானை வீதியூடாக சிரணிச் சந்தி, மருதனார்மடம் வீதியூடாக உரும்பராய் சந்தியை வந்தடைந்த பின் அங்கிருந்து உரும்பராய், கோப்பாய் வீதியூடாக மாவீரர் துயிலுமில்லத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு பி. ப. 1-30 மணிக்கு இராணுவ மரியாதைகளுடன் வித்துடல் விதைகுழியில் விதைக்கப்படும்.

## றெட்பானா கிராமத்தில் 53 வீடுகள் எரிப்பு

(மட்டக்களப்பு)

வெல்லாவெளி றெட்பானா கிராமத்தில் சிறிலங்கா இராணுவத்தினர் 53 வீடுகளைத் தீக்கிரையாக்கியதால் அங்கு குடியிருந்த மக்கள் நிர்க்கதி நிலையை அடைந்துள்ளனர்.

றெட்பானா கிராமத்தில் கடந்த 3-ம் திகதி குடும்பஸ்தரான கோபாலப்பிள்ளை என்பவர் சிறிலங்கா இராணுவத்தினரால் மோசமான முறையில் சித்திரவதை செய்து கொல்லப்பட்டது தொடர்பாக நேற்று செய்தி வெளியிட்டிருந்தது தெரிந்ததே.

மேற்படி சம்பவத்தைத் தொடர்ந்து பீதியடைந்த மக்கள் தங்கள் வீடுகளில் இருந்து வெளியேறி அருகிலிருந்த கோவில் ஒன்றில் தஞ்சம் புகுந்தனர். மறுதினம் நிலைமை வழமைக்குத் திரும்பியதும் தம் வீடு திரும்பிய போது 53 வீடுகள் எரிந்து சாம்பராகி இருந்ததைக் கண்டு

(04ஆம் பக்கம் பார்க்க)

## கனடா ஆயுதக் கப்பல் திசை திரும்பிச் சென்றதாம்

(கொழும்பு)

ஆயுதங்கள் மற்றும் ஆர் டி எக்ஸ் வெடிமருந்துகளுடன் இந்திய தீபகற்பத்தை நோக்கி வந்து கொண்டிருப்பதாகக் கண்டுபிடிக்கப்பட்ட வெளிநாட்டுக் கப்பல் வேறொரு இடத்தை நோக்கிப் போய்க் கொண்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பாதுகாப்புப்படை வட்டாரங்களின்படி அந்த ஆயுதக் கப்பல் கடந்த செவ்வாய்க்கிழமை மறைந்து போய்விட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. கப்பல் கடைசியாக இந்தியக் கரைக்கப்பால் கடலில் பயணித்துக் கொண்டிருந்ததாக அவதானிக்கப்பட்டதால் கப்பலின் நடமாட்டம் குறித்து

[4ஆம் பக்கம் பார்க்க]



பருத்தித்துறையில் நேற்றுமுன்தினம் திறந்து வைக்கப்பட்ட தமிழீழத்தின் மூன்றாவது நீதி மன்றத்தில் வழக்கு விசாரணை நடைபெறும்போது எடுக்கப்பட்ட படம்.

## புலிகளின் தாக்குதல் யுத்திகள் உலகில் வேறு எங்கும் இல்லை

### சவூதி பத்திரிகை தெரிவிப்பு

(ரியாட்)

இலங்கையில் தற்போது விடுதலைப்புலிகளின் கை ஓங்கியிருக்கின்றது. அண்மைக் காலங்களில் இவர்கள் அரச கடற்படைக்கு எதிராக நடத்திய கரும்புலித்தாக்குதல்கள் அரசபடைகள் எதிர்நோக்கும் மோசமான அதிரடித்தாக்குதல்களாகும் என சவூதி அரேபியாவிலிருந்து வெளிவரும் ரியாட் டெய்லி என்ற பத்திரிகையின் ஆசிரிய தலையங்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

விடுதலைப்புலிகள் இலங்கையில் மேற்கொள்ளுவது போன்ற அதிரடி தாக்குதல்

(4ஆம் பக்கம் பார்க்க)

தமிழ் நாட்டிலிருந்து

## கப்பல் மூலம் திரும்பிய தமிழ் வாலிபர் கைது

(திருமலை)

தமிழகத்தில் அகதிகளாக தங்கியிருந்து விட்டு நிக்கோபார் கப்பல் மூலம் தாயகம் திரும்பிய வாலிபர் ஒருவரை திருமலையில் வைத்து தேசவிரோதிகள் கைது செய்துள்ளனர்.

கடந்த 3ஆம் திகதி மேற்படி கப்பல் மூலம் திருமலைத் துறைமுகத்தில் வந்திறங்கிய ரமேஸ் (வயது 16) என்ற வாலிபரை உப்புவெளி கிறோட் ஹோட்டலில் தங்கியிருந்த போது அங்கு வந்த ரெலோ குழுவினர் கைது செய்து தமது முகாமில் தடுத்து வைத்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

## மீனவர் நிவாரணத்தை மீளவும் வழங்க கோரி மகஜர்

குருநகர்ப் பகுதி மக்களிற்கு இதுவரை வழங்கப்பட்டு கடந்த நான்கு மாதங்களுக்கு மேலாக வழங்காமலிருக்கும் உலர் உணவு நிவாரணத்தை மீளவும் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளுமாறு கோரும் மகஜர் ஒன்றை குருநகர் சனசமூக நிலையம் நேற்று யாழ். அரசஅதிபர் திரு. கா. மாணிக்கவாசகர் அவர்களிடம் நேரில் சமர்ப்பித்தது.

கடல் வலயசட்டத்தாலும் சிறிலங்கா இராணுவம் மண்டைதீவு, பூநகரி, கல்முனைப் பகுதிகளில் நிலைகொண்டு மீனவர்கள் மீது நாளாந்தம் தாக்குதல்களை தொடுத்து வருவதனாலும் மீனவர்கள் தொழில் செய்ய முடியாமல் மிகவும் கஷ்டப்படுகிறார்கள் எனவும், மீனவர்கள் நிவாரணம் கடந்த ஐந்து மாதங்களுக்கு மேலாக வழங்காமல்

(4ஆம் பக்கம் பார்க்க)

## பூநகரி பாதை தொடர்பாக உடன்பாடு எதுவும் இல்லை

### அரசாங்கம் அறிவிப்பு

(கொழும்பு)

சங்குப்பிட்டி-பூநகரி பாதை தொடர்பாக விடுதலைப் புலிகள், அகதிகளுக்கான ஐ நா. உயர்ஸ்தானிகராலயம் என்பவற்றுடன் முக்கூட்டு உடன்படிக்கை எதையும் செய்யவில்லை என அரசு நேற்று அறிவித்தது.

நேற்று வெளியான ஐலண்ட் பத்திரிகையில் முக்கூட்டு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டதாக வெளியான செய்திக்கு அரசு மறுப்பறிக்கை ஒன்றை நேற்று வெளியிட்டது.

(4ஆம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

**ஆண்டு 6 அனுமதிப் பரீட்சை**

ஆண்டு 5 மாணவர்களுக்கு பிரபல பாடசாலை மாதிரி அனுமதித் தேர்வு வினாத்தாள் 12-09-93 ஞாயிறு வெளியிடப் படும். விடையளித்துத் தந்தால் திருத்திக் கொடுக்கப் படும். மாதிரி வகுப்புக்களும் நடைபெறுகின்றன. புதிய கல்வி நிலையம் 219, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (சி-7397)

**தவறவிடப்பட்டது**

பாஸ்போட், அடையாள அட்டை, வங்கிப் புத்தகம், வைத்திய ஆவணமும் வேறு ஆவணங்களும் அடங்கிய பையை ஒன்று நல்லூர்—பூநகரிக்கும், இணுவிலுக்கும் இடையில் தவறவிடப்பட்டுவிட்டது. கண்டெடுத்தவர்கள் பின்வரும் முகவரிக்கு ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும். மகராசி ரெக்ஸ்ரைல், சுன்னாகம். (5942)

**சேவைக்கால பயிற்சிகள் (நெல்லியடி)**

வடமராட்சிக் கல்விக் கோட்டத்திலுள்ள சகல கொத்தணிகளையும் உள்ளடக்கியதாக, சகல பாடங்களுக்கும் 3-ம் தவணைக்கான சேவைக்கால பயிற்சி வகுப்புகள் வலய மட்டத்தில் பாடசாலைகளில் நேற்றுமுதல் நடைபெற்று வருவதாக பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு எஸ். செல்லத்துரை தெரிவித்துள்ளார். வடமராட்சி கோட்ட மட்டத்தில் ஆரம்பக்கல்வி வளமாக்கல் சம்பந்தமாக அதிபர்கள், ஆரம்பப்பகுதித் தலைவர்களுக்கான சேவைக்காலப் பயிற்சியும், செயலமர்வும், எதிர்வரும் 14ம் திகதி பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலையிலும் 15ம் திகதி அல்வாய் சின்னத்தம்பி வித்தியாலயத்திலும் காலை 8-30 முதல் மாலை 4-30 மணிவரை நடைபெறவிருக்கின்றன. (30)

**அப்பியாச கொப்பிகள்**

பாடசாலை மாணவர்களுக்குத் தேவையான அப்பியாசக் கொப்பிகளை அதிபர்கள் நேரடியாக கல்வித் திணைக்களத்தில் பணத்தினைச்

## மருத்துவ வசதி இன்மையால் இறந்தோர் 86 ஆக உயர்வு

தீவுப்பகுதியில் இராணுவ நடவடிக்கையின் பின்னர் வேலணை உதவி அரசாங்க அதிபர் பிரிவில் 86 பேர் மரணமடைந்துள்ளனர் என வேலணை அரசாங்க அதிபர் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இவ்வாறு மரணம் அடைந்தவர்கள் சிறு நோய்களுக்கு உடனடியான மருத்துவ வசதி கிடைக்காமையினால் மரணம் அடைய வேண்டிய நிலை ஏற்பட்டதாக அந்த வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

தீவு பகுதிகளில் மருத்துவ வசதியும், மருந்து பொருள்களுக்கும் பெரும் தட்டுப்பாடு இருப்பதாகவும், மேலதிக சிகிச்சை பெறவேண்டுமாயின் இராணுவ, கடற்படையினர்களின் அனுமதியுடன் இவர்கள் திருகோணமலைக்கு கொண்டு செல்ல வேண்டியுள்ளது இவ்வாறு கொண்டு செல்லும் போது ஏற்படும் சிரமங்களினாலே இவர்கள் பெரும்பாலானவர்கள் மரணம் அடைந்துள்ளதாக அவ் வட்டாரங்கள் மேலும் தெரிவித்துள்ளன. (நி)

## 3-ம் ஆண்டு நினைவலைகள்



தாயின் மடியில் 17-8-1975

தமிழீழ மண்ணில் 13-9-1990

திதி : 11-9-1993

**வீரவேங்கை குருபரன்**

**செல்வன் சங்கரலிங்கம் யோகசேகரன் [கரன்]**


பால் மணம் மாறாப் பாலகனே
பள்ளிப்படிப்பதனை பாதியிலே நிறுத்தி விட்டு
வேங்கை படையிலே சேர்ந்தவனே
உன் சிரிப்பாலும் பண்பாலும் பேச்சாலும்
வீரமான நடையாலும் எம் நெஞ்சங்களில்
உன் நினைவலைகள் நிஜமாய் நிறைகிறதே

உன் ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

உன் பிரிவால் துயருறும்
அப்பா, அம்மா, சகோதரர்கள், சகோதரி.

கொக்குவில் மேற்கு,
கொக்குவில். (5935)

## ஓர் ஆண்டு நினைவஞ்சலி



**புதிய சேவை**

இன்று முதல் ஆரம்பம்
பெண்கள் தையற் பிரிவு

பெண்கள் குழந்தைகளிற்கான உடைகள் தைத்திட

**எழிலகம்** மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம். (சி-7393)

## வாழ்த்துகிறோம்!

இன்று நடைபெறும்
**பட்டமளிப்பு விழாவில்**

கலந்து பட்டம் பெறும் சகல பட்டதாரி மாணவ மாணவிகளுக்கும் எமது மனமார்ந்த வாழ்த்துக்களை தெரிவிப்பதில் பெருமகிழ்ச்சி அடைகின்றோம்,

**சித்ராலயா**

18, ஸ்ரான்லி வீதி, (அருச்சுனா வீதி)
யாழ்ப்பாணம்.

குறிப்பு:- எம்மிடம் மஞ்சள் (Yellow), கறுப்பு (Black பல்கலைக்கழக மேலங்கிகள் (Cloak) உள்ளன என்பதை தெரிவித்துக்கொள்கின்றோம்.

(5981)

## நியூட்டன் அக்கடமி

இருபாலை வீதி, கோண்டாவில்.

**1993-ல் O/L**

பரீட்சைக்குத் தோற்றும்
மாணவர்களுக்கு...

துரித மீட்டல் வகுப்புக்கள்

இன்று முதல் ஆரம்பம்

கணிதம்: எஸ். கருணாகரன்

சனி, ஞாயிறு காலை 6 45 செவ்வாய் – மாலை 4.30

ஆண்டு 04 முதல் ஆண்டு 11 வரையான வகுப்புகளுக்கு புதிய அனுமதிகள் வழங்கப்படுகின்றன.

(5937)

## 31-ம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும் அந்தியேட்டி அழைப்பும்



| தோற்றம்: | மறைவு: |
|---|---|
| 04 | 12 |
| — | — |
| 04 | 08 |
| — | — |
| 1941 | 1993 |

அமரர்

**திருமதி மகேஸ்வரி மாணிக்கவாசகர்**

(புலோலி தெற்கு, புலோலி)

எங்கள் அன்பு அன்னை, பாசத்தின் சிகரம் எம்மை விட்டுப் பிரிந்து மாதமொன்று சென்றாலும் அவரின் நினைவுகள் எம்மை விட்டகலாது.

அன்னாரின் இறுதிச் சடங்குகளில் கலந்தோர், அனுதாபச் செய்திகள் அனுப்பியோர், உதவி புரிந்தோர், யாழ். வர்த்தக வங்கி முகாமையாளர், ஊழியர்களுக்கு மனமார்ந்த நன்றிகள்.

இன்று அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் அந்தியேட்டி கிரியைகளிலும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்களை அழைக்கின்றோம்.

மணி மனை, —குடும்பத்தினர்
புலோலி தெற்கு, புலோலி.
11-09-1993. (5927)

## நினைவு கூருகின்றோம் ... 1993-09-11

1988ஆம் ஆண்டு இதே தினத்தில் மட்டு - மண்முனைத்துறையில் இந்தியப்படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பில் வீரச்சாவெய்திய-
**டட்லி** (க. கருணாகரன் - மட்டு)

நல்லூர் நாவலர் கலாச்சார மண்டபத்தில் முகாமிட்டிருந்த இந்தியப்படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட பொறியியலாளரான ஈச்சமோட்டையைச் சேர்ந்த பொதுமகன்.

1989ஆம் ஆண்டு மட்டு - கஞ்சிகுடிச்சாறுப் பகுதியில் தேசவிரோத சக்திகள் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் வீரச்சாவெய்திய-
**கப்டன் குரூஸ்** (நல்லதம்பி பாக்கியராசா - கரடித் தோட்டம், காரைதீவு -அம்பாறை)

மட்டு - மண்முனைத்துறைப் பகுதியில் தேசவிரோத சக்திகள் மீது தாக்குதலின் போது வீரச்சாவெய்திய-
**2ம் லெப் அசோகன்** (ப. ஜீவராசா - 40-ம் கிராமம்- மட்டு)

வடமராட்சி கோட்ட மட்டத்தில் ஆரம்பக்கல்வி வளமாக்கல் சம்பந்தமாக அதிபர்கள், ஆரம்பப்பகுதித் தலைவர்களுக்கான சேவைக்காலப் பயிற்சியும், செயலமர்வும், எதிர்வரும் 14ம் திகதி பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலையிலும் 15ம் திகதி அல்வாய் சின்னத்தம்பி வித்தியாலயத்திலும் காலை 8.30 முதல் மாலை 4-30 மணிவரை நடைபெறவிருக்கின்றன. (30)

## அப்பியாச கொப்பிகள்

பாடசாலை மாணவர்களுக்குத் தேவையான அப்பியாசக் கொப்பிகளை அதிபர்கள் நேரடியாக கல்வித் திணைக்களத்தில் பணத்தினைச் செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம். குறைந்த அளவு அப்பியாசக் கொப்பிகளே கையிருப்பில் இருப்பதனால் முதலில் வருபவர்கட்கு முன்னுரிமை அளிக்கப்படும் என பிரதேச கல்வித்திணைக்களம் அறிவித்துள்ளது.

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம், இலங்கை.

## விஞ்ஞானபீட இரண்டாம் அரையாண்டுப் பரீட்சை-1992

இரண்டாம் அரையாண்டுப் பரீட்சைகள் 1993ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 11ம் திகதி முதலாம் வருடப் பரீட்சையுடன் ஆரம்பமாக உள்ளன.

பரீட்சைக்கு விண்ணப்பிக்கத் தகுதி வாய்ந்த விண்ணப்பதாரிகள் 1993 09,24 இற்கு முன்பாக யாழ் பல்கலைக்கழகப் பரீட்சைக் கிளையில் விண்ணப்பப்படிவங்களைச் சமர்ப்பிக்க வேண்டும். மேலதிக விபரங்களை பரீட்சைக்கிளை உதவிப் பதிவாளரிடமிருந்துநேரடியாகவோ அல்லது சுய விலாசமிடப்பட்டதும் முத்திரை ஒட்டப்பட்டதுமான 23 செ.மீ x10 செ.மீ அளவுடைய கடிதவுறையை அனுப்பியோ பெற்றுக் கொள்ளலாம். தாமதமாகச் சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

பதிவாளர்

(சி 7394)

---


உன் ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

உன் பிரிவால் துயருறும்
அப்பா, அம்மா, சகோதரர்கள்,
சகோதரி.

கொக்குவில் மேற்கு,
கொக்குவில். (5935)

---

# ஓர் ஆண்டு நினைவஞ்சலி



## காசிப்பிள்ளை முருகுப்பிள்ளை

மலர்வு:
28-08-1937

உதிர்வு
28 08-1992

ஆண்டு பல ஆனாலும்
அன்பினால் அரவணைத்து
நீண்ட பெரு வாழ்வு
நீ வாழ்வாய் என்றிருந்தோம்
காத்திருந்த துரோகிகளினால்
மாண்டு மண்ணுக்குள்
மாயமாய்ப் போனாலும்
நீண்ட பெரு நினைவாய்
நிலைத்திருப்பாய் நீ ஐயா
ஆண்டு பல ஓடினும் என்ன?
அணைந்திடா உங்கள்
நினைவுகள் அன்றோ
என்றும் வழிகாட்டும் எம்
வாழ்வின் குல விளக்கு

என்றும் உங்கள் நினைவில் வாடும்
அன்பு மனைவி (அம்மன்கிளி)
ஆசை மகன் (மதியழகன், கனடா)

பிள்ளையார் வீதி,
மயிலிட்டி. (5929)

---

## பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கு...

துரித மீட்டல் வகுப்புக்கள்

## இன்று முதல் ஆரம்பம்

கணிதம்: எஸ். கருணாகரன்

சனி, ஞாயிறு காலை 6 45 செவ்வாய் - மாலை 4.30

ஆண்டு 04 முதல் ஆண்டு 11 வரையான வகுப்புகளுக்கு புதிய அனுமதிகள் வழங்கப்படுகின்றன.

(5937)

---

சாவகச்சேரி ப. நோ. கூ. சங்கம் சாவகச்சேரி

வொறி சாரதி (தற்காலிகம்)

## பதவிக்கான விண்ணப்பம் கோரல்

(812.11)

சம்பள அளவுத்திட்டம்: 805--1260 / 25 X 7-35 X 8

(அத்துடன் கூட்டுறவு வேலையாளர் ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட படிகளும்)

மேற்படி பதவிக்கு கீழ்வரும் தகைமையுடைய ஆள்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பத்துடன் கல்விச்சான்றிதழ், வதிவிடச் சான்றிதழ், பிறப்பு அத்தாட்சிப்பத்திரம், அனுபவச்சான்றிதழ் ஆகியவற்றின் பிரதிகளுடன் 'பொதுமுகாமையாளர்' சாவகச்சேரி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம், சாவகச்சேரி என்ற விலாசத்திற்கு 25 09.93-ற்கு முன் கிடைக்கக் கூடியதாக பதிவுத் தபாலிலோ அல்லது நேரிலோ சமர்ப்பித்து உறுதிப்படுத்தவும்.

1. கல்வித்தகைமை:- 5-ம் வகுப்பு தராதரப்பத்திரம் பஸ், லொறி, ரக்டர் (பெட்டியுடன்) போன்ற வாகனங்கள் செலுத்துவதற்கு அனுமதிப்பத்திரமும், சாரதியாக 4 வருடத்திற்குக் குறையாத அனுபவமும்.

2 வயது:- 20 தொடக்கம் 40 வரை

3. நிபந்தனைகள்:- அ) விண்ணப்பதாரர் 2 வருடத்திற்கு மேல் யாழ் மாவட்டத்தில் வசிப்பவராக இருத்தல் வேண்டும்.

ஆ) சங்க எல்லைப்பரப்பில் வசிப்பவராக இருத்தல் வேண்டும்.

இ) ஆங்கிலம், சிங்களம் பேசத் தெரிந்திருத்தல் விரும்பத் தக்கது.

ஈ) சங்கத்தால் நிர்ணயிக்கப்படும் பிணைப்பணம், செலுத்தத் தயாராக இருத்தல் வேண்டும் [ரொக்கம், ஆதனம்]

பொதுமுகாமையாளர்,
சாவகச்சேரி. ப. நோ. கூ. சங்கம்,
சாவகச்சேரி. 04-09-1993

[சி/7370]

---

நினைவு கூருகின்றோம் ...

## 1993-09-11

1988ஆம் ஆண்டு இதே தினத்தில் மட்டு - மண்முனைத்துறையில் இந்தியப்படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பில் வீரச்சாவெய்திய-

**டட்லி** (க. கருணாகரன் - மட்டு)

நல்லூர் நாவலர் கலாச்சார மண்டபத்தில் முகாமிட்டிருந்த இந்தியப்படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட பொறியியலாளரான ஈச்சமோட்டையைச் சேர்ந்த பொதுமகன்.

1989ஆம் ஆண்டு மட்டு - கஞ்சிகுடிச்சாறுப் பகுதியில் தேசவிரோத சக்திகள் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் வீரச்சாவெய்திய-

**கப்டன் குரூஸ்** (நல்லதம்பி பாக்கியராசா - கரடித் தோட்டம், காரைதீவு -அம்பாறை)

மட்டு - மண்முனைத்துறைப் பகுதியில் தேசவிரோத சக்திகள் மீது தாக்குதலின் போது வீரச்சாவெய்திய-

**2 ம் லெப் அசோகன்** (ப. ஜீவராசா - 40-ம் கிராமம் - மட்டு)

1990ஆம் ஆண்டு யாழ் - வசாவிளான் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய-

**தயான்/தயாளன்** (இராசையா இராஜேந்திரகுமார் - 257, மாணிக்கபுரம் - விசுவமடு)

யாழ் - கோட்டைப் பகுதியில் சிறிலங்காப்படையினர் மேற்கொண்ட விமானத்தாக்குதலில் வீரச்சாவெய்திய-

**முரளி** (— — ஓட்டுமடம் - யாழ்ப்பாணம்)

மட்டு - மியாங்குளம் பகுதியில் எதிர்பாராதவிதமாக கண்ணிவெடி வெடித்ததில் எமைப்பிரிந்த-

**கெல்டன்** (— — பழுகாமம் - மட்டு)

யாழ் - கோட்டையில் சிறிலங்கா இராணுவத்தினருடன் ஏற்பட்ட நேரடிச்சமரில் வீரச்சாவெய்திய-

**அமலதாஸ்** [கணேசராசா முரளிதரன் - மூத்ததம்பி ஒழுங்கை, மானிப்பாய் - யாழ்]

மணலாறு, நெடுங்கேணி. நயினாமடுப் பகுதியில் சிற்றூர் ஒன்றின் மீது சிறிலங்கா விமானப்படையினர் மேற்கொண்ட உலங்குவானூர்தித் தாக்குதலில் கொல்லப்பட்ட 2 தமிழ்ப்பெண்கள்.

மட்டுநகரில் சிறிலங்கா இராணுவத்தினரால் கடத்திச் செல்லப்பட்டுப் படுகொலை செய்யப்பட்ட 4 தமிழர்கள்.

ஏறாவூர்ப் பகுதியில் சுட்டுக் கொல்லப்பட்ட ஐயங்கேணியைச் சேர்ந்த தமிழிளைஞன்.

யாழ் - மண்டைதீவுப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் நிலை கொண்டு இருந்து விட்டுச் சென்ற பின் கிணற்றிலிருந்து இதே தினத்தில் எலும்புக்கூடாக மீட்கப்பட்ட 07 தமிழர்கள்.

1991ஆம் ஆண்டு மணலாற்றில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய-

**கோபிநாத்/காண்டீபன்** [வேலுப்பிள்ளை புஸ்பராசா - உடுவில் தெற்கு - சுன்னாகம்]

1992ஆம் ஆண்டு யாழ் - அளவெட்டியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான நேரடிச் சமரில் வீரச்சாவெய்திய-

**சிலம்பரசன்/லோலோ** [சின்னையா தயாபரன் - கோப்பாய் தெற்கு. இருபாலை - யாழ்]

சாவகச்சேரிப் பகுதியில் எதிர்பாராத விதமாக ஏற்பட்ட விபத்தொன்றில் எமைப்பிரிந்த-

**லெப். பூபால்** [வேலாயுதம் கிருஷ்ணகுமார் - அல்வாய் வடக்கு - பருத்தித்துறை]

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்.

## தமிழீழ விடுதலைப் புலிகள்

[சி/7396]

### சிந்தனைக்கு

கடந்த காலம் கடந்துவிட்டது. வருங்காலம் சந்தோஷமாக இருக்க வேண்டுமானால் நிகழ்காலத்தில் செய்யவேண்டியதை செய்துகொள்.

-ஹஸ்ரத் அலி

ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 11-09-1998
தொலைபேசி
ஆசிரியபீடம் 025-2839 நிர்வாகபீடம் 2028
த. பெ. எண்-05

## உண்மையை உணர்த்தட்டும்

"இலங்கையில் நடைபெறும் உள்நாட்டுப் போரின் உண்மை நிலையினை பத்திரிகைகள் வெளியிடவேண்டும். அரசு தமிழர்களின் பிரச்சினையை பயங்கரவாதப் பிரச்சினை என மீண்டும் மீண்டும் கூறி உண்மையை மறைத்து வருகின்றது. பத்திரிகைகள் உண்மை நிலையை உணர்ந்து செயற்படவேண்டும்."

நவசமசமாஜக் கட்சியின் பொதுச் செயலாளர் கலாநிதி விக்கிரமபாகு கருணாரெட்ணா விடுத்துள்ள கோரிக்கையானது, காலம் தாழ்த்தியதாயினும், நாற்பது வருடங்களாக இலங்கையில் நீடித்து வரும் இனப்பிரச்சினைத் தீர்விற்கு அவசியமானது ஆகும். ஏனெனில், நாற்பது வருடங்களுக்கு மேலாக இந்த இனச்சிக்கல் நீடித்த பொழுதிலும், சிங்கள மக்கள் இதைத் தெளிவாகப் புரிந்து கொள்ளவில்லை என்பது உண்மையே.

சிங்கள மக்கள் அனேகர் இனப்பிரச்சினை பற்றிய யதார்த்த நிலை எதையும் அறிந்திருக்கவில்லை. சிங்கள புத்திஜீவிகள், வடபகுதிக்கு விஜயம் செய்யும் சிங்கள பத்திரிகையாளர்கள் போன்றவர்களே இனப்பிரச்சினை குறித்தும், அதன் இன்றைய நிலைகுறித்தும் தவறான கணிப்பீடே கொண்டுள்ளனர். இது அவர்களின் எழுத்துக்களிலும், சந்திப்புக்களில் இருந்தும் தெரிய வருகின்றது. இந்நிலையில் சிங்களப் பொதுமக்கள் இது குறித்து அறியாமல் இருப்பது குறித்து ஆச்சரியப்பட ஏதுமில்லை.

சிங்கள மக்களைப் பொறுத்து இனப்பிரச்சினையானது சிங்களவரின் நிலத்தையும், உரிமைகளையும் தமிழர்கள் பறிக்கப் பார்க்கின்றார்கள் என்பதே ஆகும். தமிழ் மக்கள் தமது உரிமையையே கேட்கின்றார்கள். தமது நிலத்தையே கோருகின்றார்கள் என்பதெல்லாம் அவர்களைப் பொறுத்து விளங்கிக்கொள்ள முடியாதவை. தமிழர்கள் என்றால் எதிரிகள் என்ற நிலைக்கு அவர்கள் வளர்க்கப்பட்டு விட்டார்கள்.

இவ்வாறாக சிங்கள மக்கள் நிலையை விளங்கிக்கொள்ளாததிற்கும், தவறான கற்பிதம் கொள்வதற்கும் சிங்கள அரசியல்வாதிகளும், பேரினவாதப் பத்திரிகைகளுமே காரணமாகும். கடந்த காலத்தில் அவை வாக்கு வங்கிகளை நிரப்பி...

## ஆட்சியில் இருப்பவர்கள் தீர்வை விரும்பவில்லை

### சிறிமாவோ குற்றச்சாட்டு

(கொழும்பு)

ஐக்கிய தேசிய கட்சி அரசாங்கம் வடக்கு- கிழக்கு மக்களின் பிரச்சினையைத் தீர்த்து வைக்க விரும்பவில்லை. ஆட்சியில் இருக்கும் அவர்கள் நம்மிடம் தீர்வை எதிர்பார்க்கிறார்கள்.

சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் தலைவி சிறிமாவோ பண்டாரநாயக்காகண்டியில்இடம் பெற்ற கூட்டமொன்றில் பேசும்போது மேற்கண்டவாறு தெரிவித்தார்.

சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் 42 ஆவது வருடாந்த பொதுக்கூட்டத்தில் பிரதம அதிதியாக அங்கு அவர் கலந்து கொண்டு பேசும் போது மேலும் குறிப்பிட்டதாவது.

வடக்கு- கிழக்குபிரச்சினையைக்தீர்ப்பதற்கெனநியமிக்கப்பட்டிருக்கும் தெரிவுக்குழுவில் இருப்பவர்கள் பெரும்பாலும் ஐ தே கட்சி உறுப்பினர்களே எனினும் அவர்களால் எந்தவொரு தீர்வும் முன்வைக்க முடியவில்லை காரணம் பிரச்சினையை தீர்க்க அவர்கள் விரும்பவில்லை. பிச்சைக்காரன் புண் போல அதனை வைத்துக் கொள்ளவே அவர்கள் விரும்புகின்றனர்.

இன்று ஏராளமான இளைஞர்கள் யுத்தத்தில் செத்து மடிகின்றனர். பதினைந்து வயது சிறுவனைக்கூட இராணுவத்தில் சேர்த்துசாவதற்கு அனுப்புகிறார்கள்.

எத்தனையோ பிரச்சினைகள் பதினாறு ஆண்டுகாலமாக இந்த அரசினால் தீர்க்க முடியாமல் இருக்கின்றன என்றார்.

### ஜே. வி பி சந்தேக நபர்கள்

## 22 ஆயிரம் சிங்கள இளைஞர் விடுவிக்கப்பட்டனர்

(கொழும்பு)

வன்செயல்களில் ஈடுபட்டதாக சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட ஜே. வி. பி. சந்தேக நபர்கள் 22,444 பேரில் இதுவரை 22 ஆயிரம் பேரை விடுதலை செய்துள்ளதாக பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது

மிக மோசமான வன்முறைகளில் ஈடுபட்டதாக சாட்சியங்கள் உள்ள சுமார் முந்நூறு பேர் புனர்வாழ்வு முகாம்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டிருக்கின்றனர்.

இவர்களுள் பாடசாலை மாணவர்கள், பல்கலைக்கழக மாணவர்கள், எழுதுவினைஞர்கள் ஆசிரியர்கள் உட்பட பலதரப்பினரும் அடங்குகின்றனர்.

பாரதூரமான குற்றங்களில் ஈடுபட்டோர் மீது மிக விரைவில் வழக்குத் தாக்கல் செய்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

1988 ஆம் ஆண்டு தென்பகுதியில் வன்செயல் சம்பவங்கள் நிலவிய காலகட்டத்தில் இவர்கள் கைது செய்யப்பட்டிருந்தனர். தடுப்பு முகாமில் உள்ள அனைத்துக் கைதிகள் மீதும் விசாரணை நடத்தி முடிக்கப்பட்டுள்ளதாக ஜயலத் குழுவின் தலைவர் கூறியிருக்கிறார்.

பூஸா தடுப்பு முகாமிலும் வெலவத்தை தடுப்பு முகாமிலும் முந்நூறு பேர் வரை தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். பூஸா முகாமில் மாத்திரம் 243 பேர் உள்ளனராம்.

## ஐந்தரை வருடத்தில் மட்டும் 17,721 கொலைகள் நடந்தன

### சிறிலங்கா பொலிசார் தெரிவிப்பு

[கொழும்பு]

சிறிலங்காவில் கடந்த ஐந்தரை வருடகாலத்தில் 17 ஆயிரத்து 721 பேர் கொலை செய்யப்பட்டுள்ளனர். இதில் இவ்வருட முதல் ஆறுமாத காலத்தில் 602 பேர் கொலை செய்யப்பட்டுள்ளனர்.

பொலிஸ் தலைமையக குற்றத் தடுப்பு அறிக்கையின்படி 1988ஆம் ஆண்டு ஜனவரி முதல் 1993 ஜூன் மாதம் வரையிலான காலப் பகுதியிலேயே 17,721 பேர் கொலை செய்யப்பட்டுள்ளனர். இதில் 1989 இலேயே மிகக் கூடுதலான கொலைகள் நடைபெற்றுள்ளன அவ்வருடத்தில் 8127 பேர் கொலை செய்யப்பட்டுள்ளனர் என அவ்அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## புதிய அரசியல் கூட்டணி அமைக்க இரகசியப் பேச்சுக்கள் ஆரம்பம்

[கொழும்பு]

பாரிய அரசியல் கூட்டு ஒன்று மிக விரைவில் உருவாகக் கூடிய சந்தர்ப்பங்கள் தற்போது தோன்றியிருப்பதாக "லக்திவ" பத்திரிகை தெரிவித்துள்ளது.

இதற்கான முன்னோடியாக இரகசிய பேச்சுக்கள் நடைபெற்று வருவதாகவும் இதில் சுதந்திரக்கட்சியில் இருந்து வெளியேற்றப்பட்ட அநுரா பண்டாரநாயக்கா, ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியின் தலைவர் காமினி திசாநாயக்கா, மக்கள் ஐக்கிய முன்னணியின் தலைவர் தினேஷ் குணவர்த்தனா ஆகியோர் கலந்து கொண்டுள்ளதாக அச்செய்தி மேலும் தெரிவித்துள்ளது.

இந்த இரகசிய பேச்சுவார்த்தையின் மூலம் பொதுசன ஐக்கிய முன்னணியை பலவீனப்படுத்தும் ஒரு சம்பவமாக இது அமையும் என்றும் அரசியல் வட்டாரங்கள் மேலும் தெரிவித்துள்ளன. இவ்வாறு ஒரு கூட்டணி உருவாகும் சமயத்தில் பொதுசன ஐக்கிய முன்னணியில் உள்ள சில கட்சிகள் இக்கூட்டணியுடன் இணையும் சந்தர்ப்பங்கள் உள்ளதாக அவ்வட்டாரங்கள் மேலும் தெரிவித்துள்ளன.

## சுவாமியின் எச்சரிக்கை

(கொழும்பு)

விடுதலைப் புலிகளின் தலைவர் திரு. வே. பிரபாகரனை இம் மாதம் 30 ஆம் திகதிக்குள் மத்திய அரசு பிடிக்காவிட்டால் மத்திய அரசிற்கு எதிராக ஜனதா கட்சி செயல்படும் என்று அதன் தலைவர் டாக்டர் சுப்பிரமணியசுவாமி எச்சரித்துள்ளார்.

இதே நேரத்தில் தமிழக அரசின் நிலக்கரி ஊழல் பற்றி விசாரிக்கவும் இக்கால எல்லைக்குள் கமிஷன் நியமிக்கப்பட வேண்டுமென்றும் அவர் கேட்டுக் கொண்டார்.

## கொழும்பு மேயரின் மகள் பரீட்சையில் மோசடி

[கொழும்பு]

கொழும்பு மேயர் ரத்ன சிறி ராஜபக்சவின் மகள் க. பொ. த. உயர்தரப் பரீட்சையில் தில்லுமுல்லு செய்தமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. கொழும்பு சிறிமாவோ பண்டாரநாயக்கா வித்தியாலயத்தில் கற்கும் கொழும்பு மேயரின் மகள் பின்தங்கிய மாவட்டப் பாடசாலையான பதுளை மத்திய மகாவித்தியாலயத்தில் கற்றதான போலியான ஆவணங்களுடன் அப்பாடசாலையிலேயே பரீட்சை எழுதியுள்ளார்.

இம்மாவட்ட மாணவர்களுக்குப் பல்கலைக்கழகம் செல்ல குறைந்தளவு புள்ளியேபோதுமாக இருப்பதால் கொழும்பில் கல்விகற்ற கொழும்பு மேயரின் மகள் பதுளையில் பரீட்சை எழுதியுள்ளதாகத் தெரிய வருகிறது. இவர் பதுளை மேயரின் வீட்டிலிருந்தே பரீட்சைக்குச் சென்றதாகவும், பதுளை மேயரின் மனைவி மேற்படி பதுளை மகாவித்தியாலயத்தில் ஆசிரியையாக இருப்பதனால் அவரின் உதவி பெற்றுக் கொள்ளப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

பரீட்சை எழுதிய கொழும்பு மேயரின் மகள் மீதுசந்தேகம் கொண்ட பரீட்சை எழுதிக் கொண்டிருந்த சக மாணவிகள் கொடுத்த தகவலின் பேரில் நடைபெற்ற விசாரணையிலேயே மேற்படி மோசடி வெளிவந்துள்ளது.

### சிறிலங்கா இராணுவ நடவடிக்கையால்

## மட்டக்களப்பில் உயிரிழந்தோர் 3000 காணாமற்போனவர்கள் சுமார் 5000

### திணைக்கள மதிப்பீட்டில் தகவல்

[கொழும்பு]

சிறிலங்கா இராணுவத்தினரின் நடவடிக்கைகள் காரணமாக மட்டக்களப்பு மாவட்டத்தில் கடந்த மூன்று ஆண்டுகளில் மட்டும் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை சுமார் மூவாயிரம் ஆகும் என்றும், மேலும் காணாமற்போனவர்கள் ஐயாயிரத்துக்கும் அதிகமாகும் என்றும் புள்ளி விபரங்கள் மூலம் தெரிய வருகிறது. புனர்வாழ்வு புனரமைப்பு திணைக்களம் மேற்கொண்ட மதிப்பீடு ஒன்றிலிருந்து மேலும் தெரியவருவதாவது;

கடந்த மூன்று வருட யுத்தத்தில் மட்டும் நாலு கோடியே முப்பது லட்சம் ரூபா பெறுமதியான 3012 மீன்பிடிப் படகுகளும், 584 கோடியே முப்பது லட்சம் ரூபா பெறுமதியுடைய 55042 வீடுகளும் சேதமாக்கப்பட்டிருப்பதாகவும், பதினேழு கோடியே இருபது லட்சம் ரூபா பெறுமதியுடைய தனியார் போக்குவரத்து வாகனங்கள் சேதமாக்கப்பட்டன என்றும், மொத்தத்தில் 758 கோடி ரூபாவுக்கும் மேற்பட்ட பெறுமதியுடைய சொத்துக்கள் சேதமாக்கப்பட்டுள்ளன என்றும் ஒரு லட்சத்து மூவாயிரத்து எழுநூற்றி எழுபத்தெட்டு குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளன என்றும் கூறப்படுகின்றது.

## அரசாங்கம் கூறுவதில் உண்மை இருக்கிறதா?

### கொழும்பு பத்திரிகையில் கேள்வி

இந்த யுத்தம் தமிழ் மக்களுக்கு எதிரானது அல்ல என்று அரசாங்கம் கூறுவது உண்மையாயின், சிறிலங்கா இராணுவத்தில் கணிசமான அளவுக்கு தமிழர்கள் இடம்பெறாமல் இருப்பது ஏன் என்று கொழும்பிலிருந்துவெளிவரும் சிங்களப் பத்திரிகையொன்று கேள்வி...

### விளையாட்டு

கருத்திருத்துறைநகர்கோனைக் போறாக சிக்கல கடறுதவு...

அதன் இன்றைய நிலைகுறிக்கும் தவறான கணிப் பீடே கொண்டுள்ளனர். இது அவர்களின் எழுத்துக்களிலும், சந்திப்புக்களில் இருந்தும் தெரிய வருகின்றது. இந் நிலையில் சிங்களப் பொதுமக்கள் இது குறித்து அறியாமல் இருப்பது குறித்து ஆச்சரியப்பட ஏதுமில்லை.

சிங்கள மக்களைப் பொறுத்து இனப்பிரச்சினையானது சிங்களவரின் நிலத்தையும், உரிமைகளையும் தமிழர்கள் பறிக்கப் பார்க்கின்றார்கள் என்பதே ஆகும். தமிழ் மக்கள் தமது உரிமையையே கேட்கின்றார்கள். தமது நிலத்தையே கோருகின்றார்கள் என்பதெல்லாம் அவர்களைப் பொறுத்து விளங்கிக்கொள்ள முடியாதவை. தமிழர்கள் என்றால் எதிரிகள் என்ற நிலைக்கு அவர்கள் வளர்க்கப்பட்டு விட்டார்கள்.

இவ்வாறாக சிங்கள மக்கள் நிலையை விளங்கிக்கொள்ளாததிற்கும், தவறான கற்பிதம் கொள்வதற்கும் சிங்கள அரசியல்வாதிகளும், பேரினவாதப் பத்திரிகைகளுமே காரணமாகும். கடந்த காலத்தில் தமது வாக்கு வங்கிகளை நிரப்பிக் கொள்வதற்காக சிங்கள அரசியல் கட்சிகள் மக்களுக்கு இனவெறியை ஊட்டிய வேளை, சிங்களப் பேரினவாத பத்திரிகைகளோ, அதற்கு ஒத்தூதின.

ஆனால், இவ்வளவு அழிவுகளின் பின்பும், அரசியல்வாதிகளின் கூச்சல் நின்று விடுவதாக இல்லை. உலக நாடுகளும், பல நிறுவனங்களும் இலங்கையில் இடம் பெற்றுவரும் இன வன்முறைக்கு தீர்வுகாணுமாறு அரசாங்கத்திடம் கோரிக்கைகள் விட்டுக்கொண்டிருக்கும் வேளையில், சிறிலங்காவின் ஆட்சித் தலைவரே இலங்கையில் இனப்பிரச்சினையில்லை, 'பயங்கரவாதப் பிரச்சினை' மட்டுமே உண்டு எனத் தெரிவிப்பது உலகை ஏமாற்றும் ஒரு முயற்சியாகும்.

சிறிலங்கா ஜனாதிபதியின் இவ்வாறான கூற்றுக்கள் விநோதமானதும், கேலிக்குரியதுமாகும். இலங்கையில் இன வன்முறை பல்லாயிரக்கணக்கானோரை பலிகொண்டு விட்டதும், பல கோடி ரூபா பெறுமதியான சொத்துக்கள் நாசமானதும் உலகம் அறியும். இதேவேளை இனப்பிரச்சினை தீர்விற்கென சிங்கள அரசாங்கம் உடன்பாடுகள் செய்து கொண்டதும், சர்வகட்சி மாநாடு என்றும், வட்டமேசை மாநாடு என்றும் பாராளுமன்றத் தெரிவுக்குழு ஒன்று நியமித்ததும், ஐ.நா. சபையில் இனப்பிரச்சினைக்குத் தேவை எனக் கோருகை நிலை எழுந்துள்ளமையும் இனப்பிரச்சினை தொடர்பான நிகழ்வுகளாகும்.

இந் நிலையிலும், சிறிலங்கா ஜனாதிபதி இனப்பிரச்சினை இல்லை என சாதிக்க முற்படுவது அவரது யோலித்தனத்தையும், இனவாதப் போக்கையுமே காட்டுவதாகவுள்ளது. ஆனால், டி.பி. விஜயதுங்காவின் இந் நிலைப்பாட்டினை தமிழ் மக்களோ அன்றி உலகமோ ஏற்றுக் கொள்ளப் போவதில்லை. ஆனால், சிங்கள மக்கள் இதை எவ்வாறு புரிந்து கொள்வார்கள் என்பதே கேள்வியாகும்.

ஏனெனில், கடந்த காலத்தில் சிங்கள அரசியல்வாதிகளின் இனவெறிப் போதனைகளையும், பித்தலாட்டங்களையும் சிங்கள மக்களில் அநேகர் ஏற்றுக் கொண்டுள்ளனர். ஆகையினால் தான் இன்று சிங்களவருக்கு உண்மை நிலையை விளக்குமாறு பத்திரிகையாளரிடம் கோரிக்கை விடப்பட்டுள்ளது. கடந்த காலத்தில் ஏற்பட்ட இன மோதல்களுக்கு சிங்களப் பத்திரிகையாளர் கணிசமான பங்கு வகித்துள்ளனர். இருப்பினும் நவசம சமாஜக் கட்சி செயலாளரின் கோரிக்கையை அவர்கள் ஏற்றுக்கொண்டாலும் காலம் கடந்தாவது சிங்கள மக்களுக்காக தமது கடமையைச் செய்தவர்களாக இருப்பார்கள்.

மாணவர்கள், எழுதுவினைஞர்கள் ஆசிரியர்கள் உட்பட பலதரப்பினரும் அடங்குகின்றனர்.

லும் மூந்நூறு பேர் வரை தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். பூஸா முகாமில் மாத்திரம் 243 பேர் உள்ளனராம்.

# ஐந்தரை வருடத்தில் மட்டும் 17,721 கொலைகள் நடந்தன

## சிறிலங்கா பொலிசார் தெரிவிப்பு

[கொழும்பு]

சிறிலங்காவில் கடந்த ஐந்தரை வருடகாலத்தில் 17 ஆயிரத்து 721 பேர் கொலை செய்யப்பட்டுள்ளனர். இதில் இவ்வருட முதல் ஆறுமாத காலத்தில் 602 பேர் கொலை செய்யப்பட்டுள்ளனர்.

பொலிஸ் தலைமையக குற்றத் தடுப்பு அறிக்கையின்படி 1988ஆம் ஆண்டு ஜனவரி முதல் 1993 ஜூன் மாதம் வரையிலான காலப் பகுதியிலேயே 17,721 பேர் கொலை செய்யப்பட்டுள்ளனர். இதில் 1989 இலேயே மிகக் கூடுதலான கொலைகள் நடைபெற்றுள்ளன. அவ்வருடத்தில் 8127 பேர் கொலை செய்யப்பட்டுள்ளனர் என அவ்அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

[கொழும்பு]

சிறிலங்கா இராணுவத்தினரின் நடவடிக்கைகள் காரணமாக மட்டக்களப்பு மாவட்டத்தில் கடந்த மூன்று ஆண்டுகளில் மட்டும் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை சுமார் மூவாயிரம் ஆகும் என்றும், மேலும் காணாமற்போனவர்கள் ஐயாயிரத்துக்கும் அதிகமாகும் என்றும் புள்ளிவிபரங்கள் மூலம் தெரிய வருகிறது. புனர்வாழ்வு புனரமைப்பு திணைக்களம் மேற்கொண்ட மதிப்பீடு ஒன்றிலிருந்து மேலும் தெரியவருவதாவது;

கடந்த மூன்று வருட யுத்தத்தில் மட்டும் நான்கு

...திணைக்களங்கள் மதிப்பீட்டில் தகவல்

கோடியே முப்பது லட்சம் ரூபா பெறுமதியான 3012 மீன்பிடிப் படகுகளும், 584 கோடியே முப்பது லட்சம் ரூபா பெறுமதியுடைய 55042 வீடுகளும் சேதமாக்கப்பட்டிருப்பதாகவும், பதினேழு கோடியே இருபது லட்சம் ரூபா பெறுமதியுடைய தனியார் போக்குவரத்து வாகனங்கள் சேதமாக்கப்பட்டன என்றும், மொத்தத்தில் 758 கோடி ரூபாவுக்கும் மேற்பட்ட பெறுமதியுடைய சொத்துக்கள் சேதமாக்கப்பட்டுள்ளன என்றும் ஒரு லட்சத்து மூவாயிரத்து எழுநூற்றி எழுபத்தெட்டு குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளன என்றும் கூறப்படுகின்றது.

# தமிழக மீனவர்கள் மீது கடற்படை தாக்குதல்கள்

## முதல்வர் ஜெயலலிதா கண்டனம்

[சென்னை]

கடலில் மீன்பிடிக்கச் செல்லும் தமிழக மீனவர்கள் சிறிலங்காப் படையினரால் தாக்கப்படும் சம்பவங்கள் குறித்து இலங்கை அரசின் கவனத்திற்கு இந்திய பிரதமர் பி.வி நரசிம்மராவ் கொண்டுவர வேண்டுமெனவும், கண்மூடித்தனமான முறையில் நடைபெறும் இத்தகைய சம்பவங்கள் தொடர்ந்தும் நடைபெறாமல் தடுக்க மத்திய அரசு முயற்சி எடுக்க வேண்டுமெனவும் தமிழக முதல்வர் ஜெயலலிதா வேண்டுகோள் விடுத்துள்ளார். இது தொடர்பாக முதல்வர் ஜெயலலிதா பிரதமருக்கு கடிதம் ஒன்றையும் எழுதியுள்ளார்.

இந்த மாதமுதலாம் திகதி இந்திய மீனவர்கள் மீது சிறிலங்காக் கடற்படை நடாத்திய தாக்குதலில் இரு தமிழக மீனவர் கொல்லப்பட்டமையும் மற்றும் காயப்பட்டமையும் மூன்றாம் நான்காம் திகதிகளிலும் கூட இத்தகைய தாக்குதல் தொடர்ந்தமையையும் முதல்வர் தமது கடிதத்தில் சுட்டிக்காட்டியுள்ளார்.

அத்துடன் கச்சதீவு கடற்பரப்பை சுற்றி மீன்பிடிக்கும் உரிமை தமிழக மீனவர்களுக்கு இருப்பதாகவும், அதனைப் பேண மத்திய அரசு நடவடிக்கை எடுக்கவேண்டுமெனவும் ஜெயலலிதா குறிப்பிட்டுள்ளார்.

## அமெரிக்க அதிபர் பாராட்டு

[வாஷிங்டன்]

இஸ்ரேலுக்கும் பாலஸ்தீனிய விடுதலை இயக்கத்திற்குமிடையேயான உடன்பாட்டை அங்கீகரித்துப் பாராட்டியிருக்கும் அமெரிக்க அதிபர் பில் கிளின்டன் மேற்காசியாவில் அமைதி ஏற்படுவதற்கு இது ஓர் ஆக்கபூர்வமான நடவடிக்கை ஆகும் என்றும் தெரிவித்து உள்ளார். மூன்றாண்டுகளுக்கு முன்னர் முறிந்து போன பேச்சுவார்த்தைகளை பாலஸ்தீன விடுதலை இயக்கத்துடன் அமெரிக்கா தொடர்ந்து நடத்தலாம் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது. இதே வேளை எகிப்தும், பிரான்சும் இந்த உடன்பாட்டை வரவேற்றுள்ளன.

இஸ்ரேலை அங்கீகரிக்கும்

## பாலஸ்தீன ஆவணத்துடன் நோர்வே அமைச்சர் பயணம்

யூதர்களின் நாடாகிய இஸ்ரேலை முறைப்படியாக அங்கீகரிக்கும் பிரகடனத்தில் பாலஸ்தீனிய விடுதலை இயக்கத்தலைவர் யாசிர் அரபாத் நேற்று முன் தினம் கைச்சாத்திட்டார். இஸ்ரேலுக்கும், பாலஸ்தீனியர்களுக்குமிடையே பேச்சுவார்த்தை நடப்பதில் மிக முக்கிய பங்காற்றிய நோர்வே நாட்டின் வெளியுறவு அமைச்சர் ஜோர்கன் பெல்ஸ் இந்த ஆவணத்தை டெல் அவிவ்விற்கு எடுத்துச் சென்றார்.

அங்கு இஸ்ரேலிய பிரதமர் யிட்சாக் ரபின் கைபெழுத்திடுவார். இது ஒரு புரட்சிகரமான நடவடிக்கை என்று இஸ்ரேலின் வெளியுறவு அமைச்சர் சிமோன் பெரஸ் வர்ணித்துள்ளார்.

சோமாலியாவில்

## அமைதிப்பணியில் ஈடுபடும் அமெரிக்கக் கெலிகள் தாக்குதல்

(மொகாடிஸ்யூ)

சோமாலியாவின் அமைதிப் பணியில் ஈடுபட்டிருக்கும் அமெரிக்கத் துருப்பினர் நடத்திய தாக்குதலில் சுமார் நூறுக்கும் அதிகமானோர் கொல்லப்பட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

தலைநகர் மொகாடிஸ்யூவில் ஐ.நா. அமைதிப்படையைச் சேர்ந்த ஹெலிகப்டர்கள் மக்கள் கூட்டத்தின்மீது நடத்திய தாக்குதலில் இவர்கள் கொல்லப்பட்டதாகவும், கொலையுண்டவர்களில் பெண்கள், குழந்தைகள் பலரும் அடங்குவர் என்றும் கூறப்படுகிறது.

ஐ.நா. அமைதிப்படையின் துருப்புக்களை பாதுகாப்பதற்காகவே இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டதாக அமெரிக்கத் தளபதிகள் கூறியுள்ளனர்.

# அரசாங்கம் கூறுவதில் உண்மை இருக்கிறதா?

## கொழும்பு பத்திரிகையில் கேள்வி

இந்த யுத்தம் தமிழ் மக்களுக்கு எதிரானது அல்ல என்று அரசாங்கம் கூறுவது உண்மையாயின், சிறிலங்கா இராணுவத்தில் கணிசமான அளவுக்கு தமிழர்கள் இடம்பெறாமல் இருப்பது ஏன் என்று கொழும்பிலிருந்து வெளிவரும் சிங்களப் பத்திரிகையொன்று கேள்வி எழுப்பியுள்ளது.

அது மேலும் தெரிவிக்கையில், எதிர்காலத்திலாவது தமிழர்களை இராணுவத்தில் சேர்ப்பது குறித்து அரசு ஆலோசித்துள்ளதா என்றும் அவ்வாறாயின் இராணுவத்தில் ஆட்சேர்ப்பிற்காக வெளியிடப்பட்ட பிரச்சாரங்கள் யாவும் சிங்களத்தில் மட்டும் வெளியிடப்பட்டது ஏன் என்றும், தமிழ்மொழி அரசாங்க மொழியாகப் பிரகடனம் செய்யப்பட்டுள்ள போதும் கூட தமிழ்மொழி மூலம் பத்திரிகைகளில் இத்தகைய அரசாங்க விளம்பரங்கள் இடம் பெறாதது ஏன் என்றும் அடுக்கடுக்காகப் பல கேள்விகள் எழுப்பப்பட்டுள்ளன.

## விளையாட்டு

பருத்தித்துறை கற்கோவளம் போறாக் சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்க ஆதவன் பாலர் பாடசாலை விளையாட்டுப்போட்டியும் பரிசளிப்பு விழாவும் இன்று 11ஆம் திகதி உதயதாரகை விளையாட்டரங்கில் திரு. வை. சோமசுந்தரம் தலைமையில் நடைபெறுகின்றது. பருத்தித்துறை பிரதேச சபை விசேட ஆணையாளர் திரு சி முருகேசபிள்ளை பிரதம விருந்தினராகவும், பிரதேச சபைச் செயலாளர் திரு. ச. செல்வநிதிநாதர் விசேட விருந்தினராகவும் கலந்து கொள்கின்றனர். (25)

★

அளவெட்டி சித்தம்பலம் விளையாட்டுக் கழகத்தால் நடாத்தப்படும் கிரிக்கெட் சுற்றுப் போட்டியின் அரையிறுதி ஆட்டங்கள் இன்று காலை 9 30 மணியளவில் நடைபெறவுள்ளது. கனகரட்ணம் ம.ம. வித்தியாலய மைதானத்தில் நடைபெறும் இப்போட்டியில் நாகேஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து அளவெட்டி யுத் கழக பி அணி விளையாடும்.

பத்து முப்பது மணியளவில் மஞ்சவனப்பதி வி.க. அணியை எதிர்த்து அளவெட்டி ஐ.வி. கழக ஏ அணி விளையாடும்.

செட்டப் முறையிலான சுரந்தாங்கட போட்டித் தொடரின் அரையிறுதி ஆட்டத்தில் கே. கே. எஸ் ஐ வி. கழக அணியை எதிர்த்து ஆவரங்கால் ம. வி. கழக பி அணி விளையாடும். இது பிற்பகல் மூன்று முப்பது மணிக்கு இடம் பெறும்.

இதனைத் தொடர்ந்து நான்கு முப்பது மணிக்கு ஆவரங்கால் ம. வி. கழக ஏ அணியை எதிர்த்து பாரதி வி. கழக அணி விளையாடும்.

## மனைப்பொருளியல் கண்காட்சி

மண்டைதீவுக் கல்விக் கோட்டம் மனைப்பொருளியல் கண்காட்சி வரும் 13 14ஆம் திகதிகளில் சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரியில் காலை 9 முதல் மாலை 4 30 மணிவரை நடைபெறவுள்ளது.

மேலும், யூனியன் கல்லூரியில் [மருதனார்மடம்] மேற்படி மனைப்பொருளியல் கண்காட்சி 16, 17ஆம் திகதிகளில் காலை 9 முதல் மாலை 4.30 மணிவரை நடைபெறவுள்ளது.

## சஞ்சிகை வெளியீடு

சாவகச்சேரி இந்துக்கல்லூரியின் உயர்தர மாணவர் மன்ற விஞ்ஞான தினவிழாவும் சஞ்சிகை வெளியீடும் இன்று காலை 9 மணிக்கு கல்லூரியில் நடைபெறும். [86]

**உற்பத்தியை பெருக்கிடுவோம்**
**ஊக்கமாய் உழைத்திடுவோம்**

## உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள் 10-09-93

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்:- 10861

வடபகுதிக்கு உள்ளே வந்த வாகன இலக்கங்கள்:

37-1731, 26-6983, 26-0672, 41-9855, 22-6468, 26-5178, 24-1685, 26-3605, 24-0917, 40-7584, 26.0032.

வடபகுதிக்கு வெளியே சென்ற வாகன இலக்கங்கள்:

41-9111, 26-1321, 28-1414, 24-0528, 24-5121, 24-5416, 42-3239.



## பிற்போடப்பட்டுள்ளது

சண்டிலிப்பாய் லெப். நந்தன் சிறுவர் அறிவாலய வளர்ச்சி நிதிக்காக இன்று 11/09/93 இல் நடைபெற இருந்த

### மாபெரும் கலை விழா

தவிர்க்க முடியாத காரணங்களால் 13/09/93 திங்கட்கிழமை நடைபெறும் என்பதனை அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

நந்தன் சனசமூக நிலையத்தினர்

(5941)



## இன்று
## மாபெரும் கலை நிகழ்ச்சி

**விடுதலைப் புலிகள்**
**கலை பண்பாட்டுக் கழகத்தினரால்**
நடாத்தப்படும்

தமிழீழத்தின் தலை சிறந்த இசைக் குழுக்களான

**"ராஜன் - சாந்தன்"**
ஒரே மேடையில் இணைந்து வழங்கும்
**"காற்றினிலே வரும் கீதம்"**

இடம்: சாவகச்சேரி இந்துக் கல்லூரி

காலம்: 11-09-93 சனிக்கிழமை.

நேரம்: மாலை 7.00 மணி.

12-09-93 ஞாயிற்றுக்கிழமை இதே நிகழ்வு மானிப்பாய் மாவீரர் கலையரங்கிலும் இடம்பெறும்.

அனைத்து மக்களும் அணிதிரண்டு வருக

ரிக்கட் பெறும் இடங்கள்:
குலம் கிறீம் ஹவுஸ்,
பூபாலசிங்கம் புத்தகசாலை,
சண் றைக்கோடிங் சென்ரர் நியூமாக்கற்


கொழும்பில் கைதான

# தமிழ் வாலிபர் மீது சி. பி. ஐ. விசாரணை

(கொழும்பு)

இந்தியாவிலிருந்து இலங்கைக்கு வந்துள்ள முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தியின் கொலை தொடர்பாக விசாரணை செய்துவரும் சி.பி.ஐ அதிகாரிகள் திங்களன்று இரகசிய பொலிஸ் பாதுகாப்பில் உள்ள நிக்ஷன் என்ற தமிழ் வாலிபரிடம் இருந்து வாக்கு மூலம் பெற்றுக் கொண்டனர்.

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தைச் சேர்ந்தவர் எனச் சந்தேகிக்கப்படும் நிக்ஷன் கடந்தமாதம் சிறிலங்கா குற்றப் புலனாய்வு பொலிசாரால் கொட்டாஞ் சேனையில் வைத்து கைதுசெய்யப்பட்டார். பின்னர் அவர் இரகசிய பொலிசாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

நிக்ஷன் ராஜீவ் காந்தி கொலை செய்யப்பட்ட சமயம் இந்தியாவில் இருந்தார் எனவும் அவ்வேளையில் அவர் அங்கு பொலிசாரால் கைது செய்யப்பட்டு சாட்சிகள் இல்லாததால் விடுதலை செய்யப்பட்டார் என விசாரணைகள் மூலம் தெரியவந்துள்ளதாம். விசாரணை தொடர்பாக சி.பி.ஐ.யினர் கடந்த ஞாயிறு கொழும்பு வந்தது தெரிந்ததே.

# லலித் கொலை தொடர்பாக விசாரணைக்குழு தேவை

## சிறிமாவோ கோரிக்கை

[கொழும்பு]

லலித் அத்துலத் முதலி கொலை தொடர்பாக கட்சி சார்பற்ற கமிஷன் ஒன்றை நியமிக்க வேண்டும் என எதிர்க் கட்சிகள் அரசாங்கத்திடம் வேண்டுகோள் விடுத்துள்ளன.

லலித்கொலை தொடர்பாக விசாரணைநடத்திய ஸ்கொட் லண்ட்யார்ட் விசாரணையில் சந்தேகங்கள் எழுந்துள்ளமையினால் மேற்படி கமிஷன் ஒன்றை நியமிக்க வேண்டும் என சிறிலங்கா எதிர்க்கட்சித் தலைவி சிறிமாவோ பண்டாரநாயக்கா நேற்று பாராளுமன்றத்தில் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

சகல சந்தேகங்களை நிவர்த்தி செய்யும் முகமாக இக் கொலை தொடர்பாக சகல அம்சங்களையும் இக் கமிஷன் விசாரணை செய்ய வேண்டும். இதே வேளை இவ் அறிக்கையில் பல குறைபாடுகளும், சந்தேகங்களும் இருப்பதாக அவர் மேலும் தெரிவித்தார்.

பிரான்சிடம்

வேளை மீண்டும் கடற்புலிகளின் தாக்குதல் அதிகரித்திருப்பதைத் தொடர்ந்து மேலும் பல நவீன போர் படகுகளை பிரான்சிடம் இருந்து கொள்வனவு செய்ய பாதுகாப்பு அமைச்சு முயற்சித்து வருகின்றது.

பிரெஞ் கடற்படையின் பாரிய யுத்த கப்பல்களில் ஒன்றான கொமாண்டன்ற் போரி (Bory) கடந்த புதன்கிழமை முதல் கொழும்பு துறைமுகத்தில் தரித்து நிற்கிறது இக்கப்பல் நாளை வரை அங்கு தங்கி நிற்கும். 2100 தொன் நிறையுடைய இக்கப்பல் ஆசிய நாடுகளில் பிரான்ஸ்கொண்டுள்ள பூகோளரீதியான அக்கறையை பிரதிநிதித்துவப்படுத்தல் யுத்த தவபாட விநியோகம் என்பவற்றை முக்கியமாக செயற்படுத்தும்.

கொழும்பில் பிரெஞ் உதவியுடன் கட்டப்பட்டுவரும் கடற்படை கப்பல்களுக்கான உதிரிப்பாகவிநியோகத்தையே இந்த பாரிய பிரெஞ் கப்பல் மேற்கொள்வதாக தெரிவிக்கப்படுகிறது.

கப்டன

ஜுவத் தளபதி இரு. காலராஜ் பெற்றுக்கொள்வார். இறப்பு

புலிகளின்

கள் உலகின் எப்பகுதிகளிலும் எந்த தீவிரவாத அமைப்பினாலும் மேற்கொள்ளப்படவில்லை. அரசபடைகள் மீது விடுதலைப்புலிகள் நடத்தும் தாக்குதல நாட்டின்ஒவ்வொரு பகுதியிலும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. புலிகளின் தாக்குதலால் பொருளாதாரம் சிறிலங்காவில் அசைவற்று நிற்கிறது என கியாட் டெய்லி தனது இரண்டாம் திகதிய வெளியீட்டில் குறிப்பிட்டுள்ளது.

கனடா

சிறிலங்கா கடற்படையினர் கண்காணித்து வருவதாகப் பாதுகாப்புப்படை வட்டாரங்களை மேற்கோள் காட்டி ஐலண்ட் செய்தி வெளியிட்டுள்ளது.

கப்பல் பாதையை மாற்றி வேறு ஒரு சேரும் இடத்தை நோக்கி போய்க்கொண்டிருப்பதாக தாம் நம்புவதாகப் பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. கப்பல் நடமாட்டத்துக்கு தடைவிதிக்கப்பட்ட பிரதேசம் ஊடாக கப்பல் சிறிலங்கா கடற்பரப்பில் நுழைவதைத் தடுக்கும் மு...

தூதரகங்களை

படும் பாதிப்புகளை அந்த நாடுகளுக்கு இலங்கை அரசாங்கம் தொடர்ச்சியாக எடுத்துக்கூறிக்கொண்டே வருகிறது என்றார்.

திலகருணாரத்ன தமது கேள்வியை எழுப்பிப் பேசுகையில் மேலும் கூறியதாவது;

பிரான்ஸ், சுவிஸ்லாந்து, ஜேர்மனி, நோர்வே, சுவீடன் போன்ற நாடுகளில் விடுதலைப்புலிகள் தங்கள் அலுவலகங்களை வைத்திருக்கவும் நடவடிக்கையில் ஈடுபடவும் அவற்றின் அரசாங்கங்கள் அனுமதித்துள்ளமை அதிர்ச்சி தருவதாக இருக்கிறது.

இந்த நாடுகளின் தலைநகரங்களில் அலுவலகங்களை வைத்துக் கொண்டு இலங்கைக்கு எதிராக மோசமான நடவடிக்கைகளில் விடுதலைப்புலிகள் ஈடுபடுகின்றனர். இந் நாடுகள்

றெப்பானா

அதிர்ச்சி அடைந்ததாக அவர்கள் தெரிவித்தனர்.

மேற்படி சம்பவங்களை அவதானிக்கும்போது தமக்கு அச்சம் ஏற்பட்டுள்ளதாகவும், வீடுகளை இழந்து குழந்தைகளுடனும் முதியோருடனும் பெரும் அல்லல்படுவதாகவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

மீனவர்

நிறுத்தப்பட்டிருப்பதால் ஒருவேளை உணவுக்கே கஷ்டப்படுகிறார்கள் எனவும் இந்த மகஜரில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இது தொடர்பாக தாம் யாழ். அரச அதிபருடன் உரையாடிய போது தாம்இன்று கொழும்புசென்று அரசுடன் இது தொடர்பாக கதைத்து ஆவன செய்வதாக யாழ். அரச அதிபர் தங்களிடம் தெரிவித்ததாக குருநகர் சனசமூக நிலையச் செயலாளர் திரு. நா லூபிஸ் அன்ரனி தெரிவித்தார். (17)

மட்டு.

இப் பொதுமக்களில் ஐவரை பின்னர் படையினர் கைது செய்து கொண்டு சென்றனர் மாவடி முன்மாரியை சேர்ந்த நடராசா ஜா (18), 35 ஆம் கிராமத்தை சேர்ந்த இரு பிள்ளைகளின் தந்தை சின்னத்தம்பி ராஜா (29), இரு பிள்ளைகளின் தந்தை சிதம்பரப்பிள்ளை சச்சிதானந்தம் (30), சாமித்தம்பி ஜயாத்துரை (25), காக்காச்சிவெட்டையை சேர்ந்த சிவப்பிரகாசம் அகிலன் (22) ஆகியோரே படையினரால் கொண்டு செல்லப்பட்டவர்களாவர்.

பூநகரி

எதிர்காலத்திலும் இப்படியான முக்கூட்டு உடன்படிக்கை செய்யும் எண்ணம் அரசுக்கு இல்லாது...

சகலவற்றுடனுமே இலங்கை சிநேகபூர்வமான உறவைக் கொண்டிருப்பதால் அவற்றின் தலைநகரங்களிலும் ஏனைய இடங்களிலும் இருக்கும் புலிகளின் அலுவலகங்களை மூடுமாறு அவற்றின் அரசாங்கங்களை வெளியுறவு அமைச்சர் கேட்க வேண்டியது கடமையாகும்.

புலிகளின் அந்த அலுவலகங்களை மூடுவதற்கு தன்னாலான கூடுதல்பட்ச முயற்சியை எடுப்பதாக அமைச்சர் உறுதி மொழி அளிப்பாரா? இல்லையானால் ஏன்?

அமைச்சர் தனது முயற்சியில் வெற்றி பெற முடியாது போகுமானால் ஐரிஸ் குடியரசு இராணுவ கெரில்லாக்களின் அலுவலகம் ஒன்றை கொழும்பில் திறக்குமாறு அவ்வியக்கத்திற்கு அழைப்பு விடுக்க வேண்டும் என்றார்.


## 1-ம் ஆண்டு நினைவஞ்சலி

### நடேசு அன்னப்பிள்ளை

| பிறப்பு: | இறப்பு: |
|---|---|
| 23 - 04 - 1938 | 22 - 07 - 1992 |

திதி: 11 - 09 - 93

அம்மா! உமைப்பிரிந்து ஆண்டொன்று
ஆகிவிட்டாலும் வேகும் எம் நெஞ்சின்
தாகம் தணிக்க யாருமில்லை அம்மா
சோகம் தாளாது உம்மையே எண்ணியிருக்கிறோமம்மா!

கலைவாணி வீதி,
சித்தன்கேணி.

-பிள்ளைகள்

[5944]



## 3-ம் ஆண்டு நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

அமரர்

### சிவசாமி பொன்னுத்துரை

(மான்குட்டி)

(யாழ். மாநகரசபை முன்னைய பிரதம லிகிதர்)

அன்னாரின் இல்லத்தில் 9.9.93 இல் நடைபெற்ற ஆத்ம சாந்தி கிரியைகளில் பங்குபற்றிய உற்றார், உறவினர், நண்பர்களுக்கு நன்றிகள்.

இன்று 11-9-93 திருநெல்வேலி இந்து சிறுவர் இல்லத்து பிள்ளைகளுக்கு மதியபோசனம் வழங்கப்படும்.

திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.


மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், மாமியார்.

(5943)



## 1-ம் ஆண்டு நினைவஞ்சலியும்

திதி நாளும் [11-09-1993]



"காற்றினிலே வரும் கீதம்"

இடம்: சாவகச்சேரி இந்துக் கல்லூரி

காலம்: 11-09-93 சனிக்கிழமை.

நேரம்: மாலை 7.00 மணி.

12-09-93 ஞாயிற்றுக்கிழமை இதே நிகழ்வு மானிப்பாய் மாவீரர் கலையரங்கிலும் இடம்பெறும்.

அனைத்து மக்களும் அணிதிரண்டு வருக

ரிக்கட் பெறும் இடங்கள்:
குலம் கிறீம் ஹவுஸ்,
பூபாலசிங்கம் புத்தகசாலை,
சண் றைக்கோடிங் சென்ரர் நியூமாக்கற் மண்டப வாயிலிலும் பெற்றுக்கொள்ளலாம்.

விடுதலைப்புலிகள் கலை பண்பாட்டுக்கழகம்

விளம்பர அன்பளிப்பு:
வர்த்தகர் சங்கம். யாழ்ப்பாணம் (சி-7403)

(Bory) கடந்த புதன்கிழமை முதல் கொழும்பு துறைமுகத்தில் தரித்து நிற்கிறது இக்கப்பல் நாவை வரை. அங்கு தங்கி நிற்கும். 2100 தொன் நிறையுடைய இக்கப்பல் ஆசிய நாடுகளில் பிரான்ஸ்கொண்ட பூகோளரீதியான அக்கறையை பிரதிநிதித்துவப்படுத்தும் யுத்த தளபாட விநியோகம் என்பவற்றை முக்கியமாக செயற்படுத்தும்.

கொழும்பில் பிரெஞ் உதவியுடன் கட்டப்பட்டு வரும் கடற்படை கப்பல்களுக்கான உதிரிப்பாகவிநியோகத்தையே இந்த பாரிய பிரெஞ் கப்பல் மேற்கொள்வதாக தெரிவிக்கப்படுகிறது.

கப்டன

ஜுவதி தளபதி திரு. யாக்ராஜ் பெற்றுக்கொள்வார். சிறப்புரைகளை டாக்டர் ஜெயகுலராஜா. திரு. தமிழ்ச்செல்வன் ஆகியோரும், மதிப்புரையை யாழ். பல்கலைக்கழக தமிழ்த்துறைப்பேராசிரியர் ஆ.சண்முகதாஸ், கவிஞர் சோ. பத்மநாதன், திருமதி கோகிலா மகேந்திரன் ஆகியோரும் நிகழ்த்துவர்.

...தனது இரண்டாம் திகதிய வெளியீட்டில் குறிப்பிட்டுள்ளது.

கனடா

சிறிலங்கா கடற்படையினர் கண்காணித்து வருவதாகப் பாதுகாப்புப்படை வட்டாரங்களை மேற்கோள் காட்டி ஐலண்ட் செய்தி வெளியிட்டுள்ளது.

கப்பல் பாதையை மாற்றி வேறு ஒரு சேரும் இடத்தை நோக்கி போய்க்கொண்டிருப்பதாக தாம் நம்புவதாகப் பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. கப்பல் நடமாட்டத்துக்கு தடைவிதிக்கப்பட்ட பிரதேசம் ஊடாகக் கப்பல் சிறிலங்கா கடற்பரப்பில் நுழைவதைத் தடுக்கும் முகமாக கடற்படை தீவிர கண்காணிப்பில் ஈடுபட்டிருப்பதாகக் கடற்படை வட்டாரங்களை மேற்கோள்காட்டி ஐலண்ட் அதன் செய்தியில் தெரிவித்துள்ளது.

ஆயுதம் ஏற்றிவரும் கப்பல் சிறிலங்கா கடற்பரப்பில் கடந்த வாரம் பிரவேசிக்கும் என்று தாம் எதிர்பார்த்ததாக பாதுகாப்புச் செயலாளர் ஜெனரல் ஹமில்டன் வணசிங்கா தெரிவித்தார் இந்தக் கப்பல் குறித்து தாம் தொடர்ந்தும் கண்காணித்து வருவதாக அவர் மேலும் தெரிவித்தார்.

இப்பொதுமக்களில் ஐவரை பின்னர் படையினர் கைது செய்து கொண்டு சென்றனர் மாவடி முன்மாரியை சேர்ந்த நடராசா ஜா (18), 35 ஆம் கிராமத்தை சேர்ந்த இரு பிள்ளைகளின் தந்தை சின்னத்தம்பி ராஜா (29), இரு பிள்ளைகளின் தந்தை சிதம்பரப்பிள்ளை சச்சிதானந்தம் (30), சாமித்தம்பி ஐயாத்துரை (25), காக்கச்சிவெட்டையை சேர்ந்த சிவப்பிரகாசம் அகிலன் (22) ஆகியோரே படையினரால் கொண்டு செல்லப்பட்டவர்களாவர்.

பூநகரி

எதிர்காலத்திலும் இப்படியான முக்கூட்டு உடன்படிக்கை செய்யும் எண்ணம் அரசுக்கு கிடையாது. இத்தகைய உடன்படிக்கை எதையும் செய்து கொள்ளும்போது விடுதலைப் புலிகளை அதில் சம்பந்தப்படுத்தக்கூடாது என்பதே அரசின் நிலைப்பாடாகும் என்றும் அரசு தெரிவித்தது.

இவ்வேளை இலங்கையில் பத்திரிகைச் செய்திகள் எவ்வளவு பொய்யானவை என்பதற்கு ஐலண்ட் பத்திரிகை வெளியிட்ட இச் செய்தி உதாரணமாகும் எனவும் ஐலண்ட் பத்திரிகை ஒரு இழிவான பத்திரிகை எனவும் இது குறித்து கருத்து தெரிவித்த யூ. என். எச்.சி ஆர் அதிகாரி நிக்கலஸ் கூறினார்.


# அறிவித்தல்

இதன்கீழ் விவரிக்கப்பட்டுள்ளதும், 01-09-93 முதல் அமுலில் இருந்து வருவதுமான எமது அங்கத்துவ சங்கங்களின் பெயர் மாற்றங்கள் இக் கூட்டுறவு அமைப்புக்களோடு தொடர்புபட்ட அனைத்துத் தரப்பினரதும், அறிதலுக்கும் தொடர்புகட்குமானதாகும்.

| | 31-08-93 வரை | 01-09-93 முதல் |
|---|---|---|
| 01. | பருத்தித்துறை-புலோலி தெங்கு பனம் பொருள் உற்பத்தி விற்பனவுக் கூட்டுறவுச் சங்கம். | பருத்தித்துறை பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம். |
| 02. | வலி கிழக்கு [வ. ப] ,, | அச்சுவேலி ,, |
| 03. | கட்டைவேலி-உடுப்பிட்டி ,, | கரவெட்டி ,, |
| 04. | வலி கிழக்கு (தெ. ப.) ,, | கோப்பாய் ,, |
| 05. | யாழ். மாநகர ,, | யாழ்ப்பாணம் ,, |
| 06. | அரியாலை ,, | அரியாலை ,, |
| 07. | சாவகச்சேரி ,, | சாவகச்சேரி ,, |
| 08. | தென்மராட்சி கிழக்கு ,, | கொடிகாமம் ,, |
| 09. | பச்சிலைப்பள்ளி ,, | பளை ,, |
| 10. | கோண்டாவில்-இணுவில் ,, | கோண்டாவில் ,, |
| 11. | சுன்னாகம், அளவெட்டி, மல்லாகம் ,, | சுன்னாகம் ,, |
| 12. | தெல்லிப்பளை ,, | தெல்லிப்பளை ,, |
| 13. | மானிப்பாய்-பரிஸ் ,, | மானிப்பாய் ,, |
| 14. | பண்டத்தரிப்பு-பரிஸ் ,, | பண்டத்தரிப்பு ,, |
| 15. | வட்டு தொகுதி ,, | சங்கானை ,, |

வடமாகாண
பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம்,
429, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம். (சி/7401)



மானிப்பாய் கோவிலபற்று ப. நோ. கூ. சங்கம்

## பதவி வெற்றிடம்

சாரதி (லாண்ட்மாஸ்ரர்)

சங்கத்திற்கு "தற்காலிக சாரதி" பதவிக்கான விண்ணப்பங்கள் 20 9 93 வரை ஏற்றுக்கொள்ளப்படும்.

தகைமைகள்:-

கல்வி:- 8-ம் வகுப்பில் சித்தி
வயது:- 20 – 40 வரை.
சம்பளம்:- கூட்டுறவு வேலையாளர் ஆணைக்குழுச்சட்டத்திற்கு அமைய தற்காலிக நாளாந்த சம்பளம்.

மேற்படி பதவிக்கு சாரதியாக 5 வருட அனுபவமும், வாகனம் செலுத்த அனுமதிப்பத்திரம் உடையவராகவும், சங்க எல்லைப்பரப்பில்வதிபவராகவும் இருத்தல்வேண்டும்

விண்ணப்பிக்க விரும்புவோர் ரூ. 5/- செலுத்தி சங்கத்தினால் விநியோகிக்கப்படும் விண்ணப்பப்பத்திரத்தை பூரணப்படுத்தி "தலைவர், மானிப்பாய் கோ. ப. ப. நோ. கூ. சங்கம், மானிப்பாய்" என்ற முகவரிக்கு 20. 9. 93-ன் முன்னர் கிடைக்கக்கூடியதாக பதிவுத் தபாலில் அனுப்பி வைத்தல் வேண்டும்.

தலைவர்
09. 09. 93 மானிப்பாய் கோ.ப.ப.நோ.கூ. சங்கம்
(சி-7404)


இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 81ஆம் இலக்கத்திலுள்ள "ஈழநாதம்" பணிமனையில் 1993-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 11 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது


திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.

மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், மாமியார்.
(5943)



## 1-ம் ஆண்டு நினைவஞ்சலியும்

திதி நாளும் [11-08-1993]



அமரர் – திரு.
காசிப்பிள்ளை முருகுப்பிள்ளை
(பிள்ளையார் வீதி, மயிலிட்டி)

மலர்வு: 23-03-1937
உதிர்வு: 23-08-1992

அன்பின் உருவே
பண்பின் சிகரமே
தொண்டு உள்ளமே
உதவும் கரங்களே
வழங்கும் வள்ளலே
பொறுமையின் சின்னமே
தியாகியே! திடமனமே!

அத்தானே இத் திதி நாளில் - துலங்கும்
முத்தான பல நினைவுகளில் - கலங்கும்
கண்ணீரில் நின்பாதம் தொழுகின்றோம்.

உங்கள் ஆத்ம சாந்திக்காக ஆண்டவனை வேண்டுகிறோம்.

சுப்பர் மடம்,
பருத்தித்துறை.
- அழகு குடும்பத்தினர்.
(5939)